O.S.No. 29/2022 நாள் 09.04.2026 PW 1 – திரு. பெருமாள்

(சாட்சி மீண்டும் உதவியாளரால் பிரமாணம் செய்யப்பட்டு அனுமதியின்பேரில் தொடர்ந்து குறுக்குவிசாரணை செய்யப்படுகிறார்.)

குறுக்குவிசாரணை (2ம் பிரதிவாதிதரப்பில்)

இந்த வழக்கை தாக்கல் செய்தது என்னுடைய மனைவி என்றால் சரிதான். பிரதிவாதிகள் எல்லோரும் என் மனைவியின் சகோதரர்கள் என்றால் சரிதான். நாங்களும் பிரதிவாதிகளும் சேர்ந்து இடங்களை பிரித்து கொள்ளலாம் என்று சமாதானம் பேசி முடித்து பத்திரம் போட முடிவு எடுத்தோம் என்றால் இல்லை. பிராது சொத்துக்கள் அனைத்தும் எனது மாமனார் சொத்து என்றால் சரிதான். பிரமாணவாக்குமூலத்தில் சொல்லியுள்ள விவரங்கள் அனைத்தும் பொய்யானது என்றுசொன்னால் சரியல்ல. இந்த வழக்கை பற்றி எனக்கு எதுவும் தெரியாது என்றுசொன்னால் சரியல்ல. எனது மனைவி, அவரது சகோதரர்கள் எல்லோரும் சேர்ந்து சமாதானம் பேசி பத்திரம் போட ரெடியாக இருக்கிறார்கள் என்றும் அது எனக்கு எதுவும் தெரியவில்லை என்றாலும் சரியல்ல. நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல.

5 முதல் 7 பிரதிவாதிகள்தரப்பு குறுவிசாரணைக்காக ஒத்திவைக்கப்படுகிறது.